செய்தி வெளியீடு எண்—127 நாள்— 19.2.2008

# தமிழகத்தின் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக இரண்டு தேசிய விருதுகள் கிடைத்துள்ளன

## தமிழக அரசு அறிவிப்பு

சுற்றுலாத் துறையை ஊக்கம் அளித்து வளர்க்கும் பொருட்டு, சுற்றுலா வளர்ச்சிக்குச் சிறப்பாக பணிகள் ஆற்றிடும் மாநிலங்களைப் பாராட்டி மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் தேசிய விருதுகளை வழங்கி வருகிறது.

ஊரகச் சுற்றுலாத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் செட்டிநாடு பகுதியில் சுற்றுலா மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் விவரங்களையும், சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் என்ற அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம், தண்டரை கிராமத்தில் உள்ள இருளர் பழங்குடி மகளிர் நல சங்கம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஆற்றியுள்ள பணிகள் பற்றிய விவரங்களையும் 2006—2007 ஆம் ஆண்டின் தேசிய விருதுகளுக்கான முன்மொழிவுகளாக மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பி வைத்தது. அவற்றை ஆய்வு செய்த மத்திய அரசு சிறந்த ஊரகச் சுற்றுலாத் திட்டத்திற்காகத் தமிழகத்திற்கு ஒரு தேசிய விருதும், தலைசிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனமான தண்டரை இருளர் பழங்குடி மகளிர் நல சங்கத்திற்கு மற்றொரு தேசிய விருதும் ஆக இரண்டு தேசிய விருதுகளைத் தமிழகத்திற்கு வழங்கியுள்ளது என்றும், இந்த விருதுகள் புதுடெல்லியில் விக்யான் பவனில் 27.2.2008 அன்று நடைபெற உள்ள விழாவில் வழங்கப்படவுள்ளன என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

***

வெளியீடு— இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.